**இலங்கையிலுள்ள சுவிஸ் தூதரகத்தின் உள்ளூர் பணியாளருக்கு எதிரான வழக்கில் உரிய நடைமுறை பின்பற்றப்படாமை குறித்து வெளிவிவகாரத்துக்கான மத்திய திணைக்களம் விமர்சனம்**

ஊடக அறிக்கை 16.12.2019

கொழும்பிலுள்ள சுவிஸ் தூதரகத்தின் உள்ளூர் பணியாளர் போலியான வாக்குமூலத்தை வழங்கினார் என்ற அடிப்படையில் இன்று தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இந்த விவகாரத்தில் ஏற்படும் முன்னேற்றம் தொடர்பில் வெளிவிவகாரத்துக்கான மத்திய திணைக்களம் அக்கறை கொண்டிருப்பதுடன், முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளின்போது தேசிய சட்டம் மற்றும் சர்வதேச நியமங்களுக்கேற்ப தமது ஊழியர்களின் தனிப்பட்ட உரிமைகள் பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்த இலங்கையின் நீதித்துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளது. வெளிவிவகாரத்துக்கான மத்திய திணைக்களம் மற்றும் கொழும்பிலுள்ள சுவிஸ் தூதரகம் என்பன தொழில் வழங்குனர்கள் என்ற ரீதியில் தங்கள் பொறுப்புக்களைத் தொடர்ந்து பூர்த்திசெய்வதோடு, சம்பந்தப்பட்ட ஊழியர்களுக்கு உதவ தங்கள் சக்திக்குட்பட்டு முடிந்த அனைத்தையும் மேற்கொள்ளும்.

2019 நவம்பர் 25ஆம் திகதி, சுவிஸ் தூதரக உள்நாட்டு பணியாளர் தான் கொழும்பில் வைத்து கடத்தப்பட்டு தூதரகம் தொடர்பான தகவல்களை வெளிப்படுத்துமாறு வற்புறுத்தப்பட்டதாகத் தெரிவித்தார். இது தொடர்பான விசாரணை செயற்பாடுகளில் பாதிக்கப்பட்ட பணியாளரும், சுவிஸ் தூதரகமும் இலங்கை அதிகாரிகளுக்கு தமது முழுமையான ஒத்துழைப்பினை வழங்கினர். இவ்வாறான நிலையில், உரிய நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டுமென வெளிவிவகாரங்களுக்கான மத்திய திணைக்களம் மீண்டும் கோரிக்கை விடுக்கிறது. உடல் நலம் பாதிக்கப்பட்டிருந்த சூழ்நிலையில் குறித்த பணியாளர் மூன்று நாட்களுக்கு மேலாக 30 மணி நேரம் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதையும், விசாரணைகள் முடிவடைவதற்கு முன்னரே அவருடைய கூற்றுக்களைக் கேள்விக்குட்படுத்தி மூத்த அரச அதிகாரிகள் தெரிவித்த பகிரங்கமான அறிக்கைகளையும் வெளிவிவகாரங்களுக்கான மத்திய திணைக்களம் விமர்சிக்கிறது.

பணியாளர் கைதுசெய்யப்பட்ட பின்னர் அவரின் உரிமைகள் தேசிய சட்டம் மற்றும் சர்வதேச நீதித் தரங்களுக்கு அமைய சிறப்பாகப் பேணப்பட வேண்டும் என வெளிவிவகாரங்களுக்கான மத்திய திணைக்களம் எதிர்பார்க்கிறது. பணியாளரின் மோசமான உடல்நிலையைக் கருத்தில் கொண்டு உரிய சட்டத்தின் கீழ் இலங்கை அதிகாரிகள் தமது கடமைகளைச் செய்ய வேண்டும் எனத் தொழில் வழங்குனர் என்ற ரீதியில் வெளிவிவகாரங்களுக்கான மத்திய திணைக்களம் கோரிக்கை விடுக்கிறது. இந்த உயர்மட்ட வழக்கில் சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்தும் நாடு என்ற இலங்கையின் நற்பெயர் ஆபத்தில் உள்ளது என்பதை சுவிட்சர்லாந்து வலியுறுத்த விரும்புகிறது. வெளிவிவகாரங்களுக்கான மத்திய திணைக்களம் மற்றும் கொழும்பிலுள்ள சுவிஸ் தூதரகம் என்பன தமது பணியாளருக்கு முடிந்தளவு தனது ஆதரவினைத் தொடர்ந்தும் வழங்கும்.

இந்த பாதுகாப்புடன் சம்பந்தப்பட்ட சம்பவத்தினை தீர்பதற்கு செய்யவேண்டிய பொதுவான மற்றும் ஆக்கபூர்வமான வழிவகைகளையே எதிர்பார்ப்பதாக இலங்கை அதிகாரிகளிடம் வெளிவிவகாரங்களுக்கான மத்திய திணைக்களம் வலியுறுத்தியுள்ளது. 2019 டிசம்பர் 16ஆம் திகதி இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவுடன் நடத்திய நேரடியான சந்திப்பில் கொழும்பிலுள்ள சுவிஸ் தூதுவர் இந்த விடயத்தை மீண்டும் வலியுறுத்தியிருந்தார்.

நன்றி